# கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெருதல்

கர்த்தருடைய இராபோஜனத்தில் பங்கு பெற இயேசுவின் கட்டளையை கற்பிக்க உதவக்கூடிய ஒரு வெளிப்பாடு பின்வருகிறது.

**பகுதி ஒன்று**

திரும்பிப் பார்ப்பது

ஜெபம்

ஜெபத்தில் நேரத்தை ஆரம்பித்து தேவனை ஒன்றாக ஆராதனை செய்யுங்கள்.

## பொறுப்புக்கூறல்

செய்யப்பட்ட கடமைகள் குறித்து கேள்விகளைக் கேளுங்கள். உதாரணமாக கேளுங்கள்:

- கடந்த வாரத்தில் உங்கள் சாட்சியை யாருடனும் பகிர்ந்து கொண்டீர்களா?
- நீங்கள் தினமும் வேதாகமத்தை வாசித்தீர்களா? அல்லது வாசிக்க கேட்டீர்களா?

- வேண்டுமென்றே மற்றவர்களை நேசிக்க நடவடிக்கை எடுத்தீர்களா?
- தேவன் உங்களுக்குக் கற்பித்ததை நீங்கள் எவ்வாறு கடைப்பிடித்தீர்கள்?
- இந்த வாரத்தில் நீங்கள் பகிர்ந்து கொள்ள விரும்பும் ஏதேனும் ஜெப விண்ணப்பங்கள் அல்லது கதைகள் உள்ளதா?

## **பகுதி இரண்டு**
## மேலே பார்ப்பது

## வேத வாசிப்பு

ஒன்றாக வேதத்தை படிப்பதன் மூலம் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பெறும்படி இயேசுவின் கட்டளையைப் பற்றி கற்றுக்கொடுங்கள். இயேசு கட்டளையிட்ட ஒரு நேரத்தை முதலில் படித்து, ஒரு உண்மையான கதையைப் பற்றி விவாதிக்கவும், இது கட்டளைக்குக் கீழ்ப்படிவது எப்படி இருக்கும் என்பதை விளக்குகிறது.

மத்தேயு 26:26-29:

> அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய

சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

சிலுவையில் அறையப்படுவதற்கு சற்று முன்பு, இயேசு தம்முடைய சீஷர்களுடன் ஒரு பஸ்கா உணவைப் பகிர்ந்து கொள்கிறார். உணவின் போது, இயேசு தம்முடைய சீஷர்களிடம், அவருடைய உடலான அப்பத்தை சாப்பிடச் சொன்னார்.

பின்னர் அவர் தம்முடைய சீஷர்களிடம் திராட்சைத் பழரசத்தை, அவருடைய உடன்படிக்கையின் இரத்தமாக குடிக்கச் சொன்னார்.

லூக்கா 22:7-20:

> பஸ்காவைப் பலியிடவேண்டிய புளிப்பில்லாத அப்பப் பண்டிகை நாள் வந்தது. அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து: “நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம் பண்ணுங்கள் என்றார்.” அதற்கு அவர்கள்: “நாங்கள் அதை எங்கே ஆயத்தம்பண்ணும்படி சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.” அதற்கு அவர்: “நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது, தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்; நீங்கள் அவனுக்குப் பின்சென்று, அவன் போகும் வீட்டிற்குள் நீங்களும்

போய், அந்த வீட்டெஜமானை நோக்கி:
‘நான் என் சீஷரோடுகூடப்
பஸ்காவைப் புசிக்கிறதற்குத்
தகுதியான இடம் எங்கே என்று
போதகர் உம்மிடத்தில் கேட்கச்
சொன்னார் என்று சொல்லுங்கள்.’
அவன் கம்பளமுதலானவைகள்
விரித்திருக்கிற மேல்வீட்டிலுள்ள
ஒருபெரிய அறையை உங்களுக்குக்
காண்பிப்பான்; அங்கே
ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி
அனுப்பினார்.” அவர்கள் போய்,
தங்களிடத்தில் அவர் சொன்னபடியே
கண்டு, பஸ்காவை
ஆயத்தம்பண்ணினார்கள்.
வேளைவந்தபோது, அவரும்
அவருடனேகூடப் பன்னிரண்டு
அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள்.
அப்பொழுது அவர் அவர்களை நோக்கி:
“நான் பாடுபடுகிறதற்கு முன்னே
உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப்
புசிக்க மிகவும்
ஆசையாயிருந்தேன்.தேவனுடைய

ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, “அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.” “பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற

என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்."

கதையைப் படித்த பிறகு, கதையை இந்த வழிகளில் ஒன்றில் மதிப்பாய்வு செய்யுங்கள்:

- கதையை நினைவிலிருந்து சொல்லுங்கள்.
- கதையைப் பற்றி பேசுங்கள். என்ன நடந்தது?
- கதையை மீண்டும் சொல்லுங்கள் அல்லது வாசியுங்கள்.
- கதையை விளக்கும் நாடகத்தை நடித்துகாட்டுங்கள்.
- கதையை விளக்கும் படங்களை வரைந்துகாட்டுங்கள்.

கதையை மறுபரிசீலனை செய்த பிறகு, கதையின் அடிப்படையில்

பின்வரும் கேள்விகளைப் பற்றி விவாதிக்கவும்:

- தேவனைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?
- மனிதனைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?
- நாம் என்ன செய்யக்கூடாது?
- நாம் என்ன செய்ய வேண்டும்?

இந்த பொதுவான கேள்விகளைப் பற்றி விவாதித்த பிறகு, இந்த குறிப்பிட்ட கதைக்கு பின்வருபவை உதவக்கூடும்.

பின்வருவனவற்றைப் பற்றி விவாதிக்கவும்:

- கர்த்தருடைய பந்தி என்றால் என்ன?
  1 கொரிந்தியர் 11:23-26 -ஐ வாசியுங்கள். கர்த்தருடைய பந்தி என்பது இயேசுவை நினைவுகூருவதற்கும், அவருடைய மரணத்தை அடையாளப்படுத்துவதற்கும், அவர் வரும் வரை அவருடைய மரணத்தை அறிவிப்பதற்கும் விசுவாசிகளின் தொடர்ச்சியான செயலாகும்.

- நாம் ஏன் கர்த்தருடைய பந்தியிலே பண்கு பெறுகிறோம்?
  விரும்பினால், 1 கொரிந்தியர் 11:23-26 -ஐ வாசியுங்கள். இயேசுவின் உடல் பிட்கப்பட்டு, அவரை நம்புகிற அனைவருக்கும் அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது.

- நாம் எவ்வாறு கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பெறுகிறோம்?
  1 கொரிந்தியர் 11:27-30 -ஐ வாசியுங்கள். விசுவாசிகள் ஒன்று கூடி அப்பத்தை புசிக்கவும், குடிக்கவும் கூடிவருகிறார்கள். ஒவ்வொரு நபரும் தங்களை ஆராய்ந்து, தங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்ய வேண்டும், மேலும் நாம் மன்னிக்கப்படும்படி இயேசு மரித்ததை நினைவில் கொள்ளுங்கள்.

- தேவனின் இராப்போஜனத்தை யார் பெற வேண்டும்?
  விரும்பினால், 1 கொரிந்தியர் 11:17-34-ஐ வாசியுங்கள். இயேசுவை உறுதியாக பின்பற்றுபவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை

தகுதியான முறையில் பெற வேண்டும்.

## பயிற்சி

கர்த்தருடைய பந்தியை எவ்வாறு பெறுவது என்று கற்றுக்கொடுங்கள். இராப்போஜனத்தை ஒன்றாகக் கவனியுங்கள்.

**பகுதி மூன்று**
முன்னோக்கிப் பார்ப்பது

# அர்ப்பணிப்பு

கதையிலிருந்தும் இயேசுவின் கட்டளையிலிருந்தும் என்ன கீழ்ப்படிய வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்கவும். அடுத்த சந்திப்புக்கு முன் கீழ்ப்படிய சில வழிகள்:

- அர்பணிக்கபட்ட இயேசுவைப் பின்பற்றுபவர்களின் கூட்டத்தில் கர்த்தருடைய இராப்போஜனத்தை தவறாமல் பெறுங்கள்.
- லூக்கா 22:7-20, உங்கள் சாட்சி மற்றும் தேவனின் சாட்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- வேண்டுமென்றே மற்றவர்களை நேசியுங்கள்.

- வேதத்தை படித்து தினமும் ஜெபம் செய்யுங்கள்.

## ஜெபம்

எல்லோரும் செய்த கடமைகளுக்காக ஜெபித்து, ஜெப நேரத்தை ஒன்றாக முடியுங்கள்.

**ராஜ்ய வளர்ச்சிக்கு**

© 2023 ராஜ்ய வளர்ச்சிக்கு
ராஜ்ய வளர்ச்சிக்கான கூடுதல் தகவலுக்கு, கொடுக்கப்பட்டுள்ள லின்க்கை கிளிக் செய்யவும்:
**www.forkingdomgrowth.com**

Scripture quotations are from The Holy Bible, BSI - Tamil - O.V. (New Ortho) published by The Bible Society of India. Used by permission. All rights reserved.

ராஜ்ய வளர்ச்சிக்கு இந்த பொருளுக்கு பங்களித்த அனைவருக்கும் மிக்க நன்றி. கர்த்தரில் நீங்கள் செய்த சேவை ஒருபோதும் வீணாகாது.